1993 ஏப்ரல் 13]

2. சிறப்பு கவன ஈர்ப்பு

(அ) சேலம் மத்திய சிறையிலிருந்து 8-4-1993 அன்று எல்.டி.டி.ஈ. அமைப்பைச் சார்ந்த ஒரு கைதி தப்பிச் சென்றது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சேலம் மத்திய சிறையிலிருந்து எல்.டி.டி.ஈ. அமைப்பைச் சார்ந்த ஒரு கைதி தப்பிச் சென்றது குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. பி.வி. இராஜேந்திரன், திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, திரு. கே.ஆர். இராமசாமி, திரு. ஆர். சிங்காரம், டாக்டர் தே. குமாரதாஸ் ஆகியோர் என்னிடம் ஓர் அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். இப்பிரச்சினையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர அனுமதிக்கிறேன். திரு. சி. ஞானசேகரன்.

முற்பகல் 11.10

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மத்திய சிறைச்சாலையிலிருந்து 8-4-1993 ஆம் தேதி பட்டப்பகல் 3½ மணிக்கு சக்திவேல் என்ற விடுதலைப்புலி தப்பியோடியிருக்கிறார். அவர் சேலம் ஜெயிலிலிருந்து தப்பியோட, சில விடுதலைப்புலிகளும், சில சிறைத்துறை அதிகாரிகளும் உடந்தையாக இருந்திருக்கிறார்கள். நாலாபுறமும் காவல் காக்கும் போலீஸாரின் கட்டுக்காவலை மீறி, சக்திவேல் 'டிமிக்கி' கொடுத்து தப்பிச் செல்வது, அவ்வளவு எளிதான காரியம் அல்ல. ஈரோட்டைத் தலைமையிடமாகக் கொண்டு, விடுதலைப்புலிகளுக்கு இராணுவ உடை தயாரித்துக் கொடுத்துக் கொண்டிருந்த அந்த முக்கிய விடுதலைப்புலிதான் சக்திவேல் என்று சொல்கிறார்கள். 'தடா' கைதி என்றும் கூறுகிறார்கள். * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறையிலிருந்து தப்பிச் சென்றது பற்றிய விவரத்தை மட்டும்தான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர, ஸ்பெஷல் மென்ஷனாகத்தான் அதை அனுமதித்திருக் கிறேன். வேறு வேறு பிரச்சினைகளுக்கெல்லாம் போகக்கூடாது. இந்தப் பிரச்சினையை மட்டும் சொல்லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லா விவரங்களும் சொல்லவேண்டும் என்றால் நீங்கள் எல்லாவற்றிற்கும் சேர்த்து எழுதிக் கொடுத்திருக்க வேண்டும். அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று என்னிடம் கேட்டது, இந்த சேலம்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சம்பவத்தைப் பற்றி மட்டும்தான். ஆகவே மற்ற சம்பவங்களைப் பற்றிப் பேசக்கூடாது. இதுப்பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன் என்று வேண்டுமானால், இதை நீங்கள் கேட்கலாம்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று, விடுதலைப்புலி சேலம் ஜெயிலிலிருந்து தப்பி இருக்கிறான். ஏற்கெனவே, இஸ்மாயில் கமிஷன் அறிக்கையை இந்த அவையிலே வைத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, சிறையிலே எல்லாம் அலாரம் வைக்கப்படும்; கைதி தப்பி ஓடமுடியாதபடி தவிர்க்கப்படும் என்றெல்லாம் சொன்னார்கள். விடுதலைப்புலிகளின் ஊடுருவலின் காரணமாக, ஆயுதக் கலாச்சாரங்களின் காரணமாக எங்களுடைய இணையில்லாத தலைவர் ராஜீவ்காந்தியை, இந்தத் தமிழ் மண்ணிலே நாம் இழந்திருக்கிறோம். * *

இதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல ஏற்கெனவே இஸ்மாயில் கமிஷன் அறிக்கைப்படி அலாரம் வைக்கப்பட்டதா; எப்படி இந்தக் கைதி தப்பினான்; இப்போது அதை எல்லாம் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சேலம் சம்பவம் பற்றி நீங்கள் தெரிவித்தது அவைக்குறிப்பிலே இருக்கும். மற்ற பிரச்சினைகளையெல்லாம் நீங்கள் வேறுவிதத்திலே அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். எனவே, மற்ற இரண்டு, மூன்று இடங்களிலே நடைபெற்ற சம்பவங்களைப் பற்றி நீங்கள் குறிப்பிட்டது, அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு)

சேலம் சம்பவம் பற்றி நீங்கள் சொன்னது இருக்கிறது; அதற்கு பதில் வைக்க வேண்டுமல்லவா?

திரு. சி. ஞானசேகரன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியென்றால், ஒரே வரியில் அங்கேயிருந்து தப்பியோடிவர், மற்ற இடங்களில் வேறு சம்பவங்களிலும் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று வேண்டுமானால் சொல்லலாம். அதை நீங்கள் சொல்லவில்லை.; உட்காருங்கள். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. வேறு வகையிலே அந்தப் பிரச்சினைகளைக் கேளுங்கள். மாண்புமிகு முதலமைச்சர்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1993 ஏப்ரல் 13]

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சண்முகம் என்பவரின் மகன், விடுதலைப்புலி சக்தி, சேலம் மத்திய சிறைச்சாலை காவல் கைதியாக இருந்தவர். கடந்த 8-4-1993 அன்று மதியம் 3.10 மணியளவில், தப்பிச் சென்றுவிட்டார். தப்பித்துச் சென்ற சிறைக் கைதி, ஈரோடு நகரக் காவல்நிலைய குற்றச்சாட்டு எண். 98/91 வழக்கில் சம்பந்தப்பட்டவர். இவர் Indian Passport Act, Foreigners Act இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் ஆகியவற்றின்கீழ் குற்றம் சாட்டப்பட்டவர். தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ்- 'National Security Act'-இன்கீழ் காவலில் வைக்கப் பட்டிருந்த விடுதலைப்புலி சக்தி, 12-2-1992 அன்று விடுவிக்கப்பட்டு, அதே நாளில் மேலே குறிப்பிட்ட வழக்குத் தொடர்பாக காவல் வைப்புக் கைதியாக சேலம் மத்தியச் சிறையில் வைக்கப்பட்டார். சேலம் மத்தியச் சிறையின் மேற்குப் பக்கத்திலுள்ள 'Quarantine Cell' பகுதியில் இவரும், மற்ற 3 விடுதலைப்புலிகளும் ஒரு பிளாக்கில் தனி அறைகளில் காவலில் வைக்கப்பட்டிருந்தனர். சிறைச்சாலை பணிமாற்றி, பொறுப்புக்களை ஒப்படைத்துக் கொண்டிருக்கும்போது, கைதி சக்தி கழிப்பறைக்குச் செல்கிறேன் என்று சொல்லி, அனுமதி பெற்று, சிறை அறையை விட்டு வெளியே வந்து, சுவரில் ஏறிக் குதித்து தப்பிவிட்டார். அதுசமயம், அங்கு பணிக்கு வந்த பாதுகாவலர், கைதி சக்தி தப்பித்துச் செல்வதைப் பார்த்து, துரத்திச் சென்றார். ஆனால், கைதியைப் பிடிக்க முடியவில்லை. தப்பிய கைதி சுவரில் ஏறித் தப்பிக்க, சிறிய கம்பித் துண்டுகளை சுவரில் சொருகி, அதன்மீது ஏறி, சுமார் 12 ½ அடி உயரமுள்ள சுவரைத் தாண்டியுள்ளார். இந்தக் கைதி தப்புவதற்குக் காரணமாக இருந்தவர்கள் என்று கருதப்பட்ட சிறைத்துறைப் பணியாளர்களாகிய முதல்நிலைப் பாதுகாவலர் திரு. தங்கவேல், இரண்டாம் நிலைக் காவலர்களாகிய திருவாளர்கள் ஜெயக்குமார் மற்றும் இராமமூர்த்தி ஆகிய மூவரும் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் இதன் தொடர்பாக அஸ்தம்பட்டி காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்து, இந்த மூவரும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப் பட்டுள்ளனர்.

முற்பகல் 11.15

8-4-1993 அன்று சேலம் மத்திய சிறைச்சாலையிலிருந்து கைதி சக்தி தப்பியோடிய பொழுது அபாயச் சங்கு ஊதியவுடன் மாவட்டக் காவல் துறைத் தலைமையிடம் உடனடியாக எல்லாக் காவல் நிலையங்களுக்கும் விழிப்புச் செய்தி அனுப்பி, விரைவாகச் செயல்படும்படி அறிவுறுத்தப் பட்டது. மேலும், சேலம் நகரைச் சுற்றித் தீவிரமாகத் தேடப்பட்டது. இருப்பினும், இதுவரை கைதி சக்தி பிடிபடவில்லை. அவரை

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1993 ஏப்ரல் 13

விரைவில் பிடிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. பிற மாவட்டங்களுக்கும் பிரத்தியேகச் செய்தியாகத் தெரிவிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிறைக் கைதி சக்தி தப்பியோடியது எப்படி என்பது குறித்து அஸ்தம்பட்டி காவல் நிலையத்தில் தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது குறித்து முழு விவரங்களும் கிடைத்தவுடன், கைதி தப்புவதற்கு உதவியாக இருந்தவர்கள் மீதும், பணியில் கவனக்குறைவாக இருந்த சிறைத் துறை அலுவலர்கள் மீதும், கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதுபோன்ற நிகழ்ச்சிகள் இனி நடக்காவண்ணம் காத்துக்கொள்ளத் தேவையான சிறப்புத்திட்டங்களை வகுத்துச் செயல்படுத்த வேண்டுமென்று சிறைத்துறையினர் அறிவுறுத்தப் பட்டுள்ளனர் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) வேதாரண்யம் கடைத் தெருவில் *12-4-1993* அன்று ஏற்பட்ட தீ விபத்து குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த பிரச்சினை, நேற்று *12-4-1993* அன்று வேதாரண்யம் நகர் கடைத்தெருவில் ஏற்பட்ட ஒரு பெரும் தீ விபத்து பற்றி திரு. பி.வி. இராஜேந்திரன், திரு. ஆர். சிங்காரம் மற்றும் திரு. ஜி. பழனிசாமி ஆகியோர் என் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர். அப்பிரச்சினையைப் பேரவையில் எழுப்ப அனுமதிக் கிறேன். திரு. பி.வி. இராஜேந்திரன்.

திரு. பி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் நகரில் வரலாறு காணாத அளவுக்கு ஒரு மாபெரும் தீ விபத்து நேற்று நடந்திருக்கிறது. நேற்று மதியம் 1½ மணி அளவில் ஆரம்பித்த அந்தத் தீ, கடற்கரையோரமானதால் இப்பொழுது கோடைக்காலத்தில் அங்கு வீசுகின்ற காற்றினால் வெகு வேகமாகப் பரவி, குறைந்தது ஒரு *50* கடைகள் Hardware shop, Electrical, பாத்திரக்கடை, சாதுக்கள் மடம், டியுடோரியல் காலேஜ், வாட்ச் கம்பெனி, பூக்கடைகள், கோயில் குருக்கள்மார் வீடுகள் இப்படியெல்லாம் பரவி, சுமார் 2 கோடி ரூபாய்க்குப் பேரழிவை அங்கு ஏற்படுத்தி இருக்கிறது. இந்தத் தீயிலே எரிந்து சாம்பலானது அந்தக் கடைகள் மட்டுமல்ல, பிற்படுத்தப்பட்ட வேதாரண்யம் பகுதியில் முன்னேற்றம் காணவேண்டுமென்று முனைப்போடு இருந்த இளம் வணிகர்கள், பொதுமக்கள் இவர்களுடைய கனவுகள், நம்பிக்கை அத்தனையுமே எரிந்து சாம்பலாகிப் போயிருக்கிறது. அதனால் இந்தப் பேரழிவை எங்களது பகுதி மக்கள் தாங்கிக் கொள்கின்ற, இந்த இயற்கையின் சவாலை எதிர்த்து நிற்கின்ற அந்த மனப்பக்குவத்தை, எல்லாம் வல்ல இறைவன் அவர்களுக்குத்தர வேண்டுமென்று நான் பிரார்த்தித்துக்